சுருக்கம்

மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையைச் சார்ந்த டி.என்.09 ஜி 1865 வாகனம் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையில் 50% தொகையை கோவை, அத்தியாவசியப் பண்டகங்கள் குறித்து விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் செலுத்தும் வகையில் ரூ.4,69,038.50/– ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்பட்டது – மீதித் தொகை ரூ.2,26,844/–ஐ வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை

அரசாணை ( பத்தாண்டு) எண்: 556

நாள்: 30 . 05. 2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய , வைகாசி 16

படிக்கப்பட்டது:

1. அரசாணை (டி) எண்.109, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி1) துறை, நாள் 31.01.2014.
2. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநரின் கடிதம் ந.க. எண்.4066 /சி3/2006, நாள் 17.02.2014.

------

ஆணை:

பார்வை 1–ல் காணும் அரசாணையில் கோவை, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையைச் சார்ந்த வாகனம் டி.என்.09 ஜி 1865 HMRTV ஆம்புலன்ஸ் வாகனம் விபத்துக்குள்ளான நேர்வில் சென்னை, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 23.01.2007 நாளிட்ட ஆணையினை செயல்படுத்தும் பொருட்டு மனுதாரர், இழப்பீட்டுத் தொகையில் 50% தொகையை 23.01.2007 வரையிலான வட்டியுடன் கூடிய தொகை ரூ.4,69,039/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிட்டது.

2. பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்படி தொகை ரூ.4,69,039/– என்பது மனுதாரரின் இழப்பீட்டுத் தொகையில் 50% தொகை மற்றும் வட்டித் தொகைக்கான முழுத் தொகை அல்ல எனவும், நீதிமன்ற ஆணையை முழுமையாகச் செயல்படுத்தும் வகையில் 24.02.2014 வரை வட்டி கணக்கிட்டு வருகின்ற தொகையில் 50% தொகையான ரூ.6,95,883/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.4,69,039/– போக மீதம் ரூ.2,26,844/–ஐ 24.02.2014க்குள் நீதிமன்றத்தில் செலுத்துமாறு 12.02.2014 நாளிட்ட அரசு வழக்கறிஞரின் கருத்துருவில் கூறப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநர்(பொ) அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி மோட்டார் வாகன

விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையான ரூ.13,61,766/—ல் 50% தொகையான ரூ.6,95,883/—ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.4,69,039/— போக மீதம் ரூ.2,26,844/—ஐ ஒப்பளித்து ஆணை வழங்குமாறு தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்கலாம் என்று முடிவு செய்து மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையைச் சார்ந்த டி.என்.09 ஜி 1865 வாகனம் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையான ரூ.13,61,766/—ல் 50% தொகையான ரூ.6,95,883/—ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.4,69,039/— போக மீதம் ரூ.2,26,844/—ஐ (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்தினான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2211.00 குடும்ப நலம் – 104 போக்குவரத்து – I திட்டத்தில் சேராதது – AA – பொதுச் சுகாதார மற்றும் மருத்துவத் துறையின் மோட்டார் வண்டிகளைப் பராமரிப்பதற்கான பணியாளரமைப்பு – 51 இழப்பீடு – 02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
> (த.தொ.கு.2211 00 104 AA – 5122)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014–2015ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும் அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2014–2015ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்–I) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா. எண்.27559 / சுகாதாரம்–1, /2014–1 நாள் 29.05.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.410 (நானூற்று பத்து) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
தமிழ்நாடு மாநில சுகாதார போக்கு வரத்துத் துறை இயக்குநர், சென்னை–32.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35

சம்பளக்கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை—35.

<u>நகல்</u>

நிதி (வ.செ. பொது—2 /சுகாதாரம் – I) துறை, சென்னை—9.

உள்(போக்குவரத்து – IV)துறை, சென்னை—9.

சட்டத்துறை, சென்னை—9.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை—09.

இருப்பு கோப்பு / சுத்த நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/05/14

பிரிவு அலுவலர்.